சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2008–09 – எழும்பூர் சட்டமன்ற தொகுதி – எழும்பூர் அரசு குழந்தைகள் நலமருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவிற்கு தேவையான உயிர்காக்கும் கருவிகள் வாங்குவதற்கு வரையறுக்கப்படாத நிதியில் பற்றாக்குறை காரணமாக கட்டாயப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ள அரசின் சிறப்பு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது

**கடிதம் எண். (1D) எண். 49/மா.அ.தி.1/09, நாள் 29.1.2009**

அனுப்புநர்
திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

அய்யா,

பொருள் : சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2008–09 – எழும்பூர் சட்டமன்ற தொகுதி – எழும்பூர் அரசு குழந்தைகள் நலமருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவிற்கு தேவையான உயிர்காக்கும் கருவிகள் வாங்குவதற்கு வரையறுக்கப்படாத நிதியில் பற்றாக்குறை காரணமாக கட்டாயப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ள அரசின் சிறப்பு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நி) எண். 107, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 23.6.2008.
2. ஆணையர், சென்னை மாநகராட்சி கடிதம் .க.து.ந..க.எண். பி6/4312/2008, நாள் 26.12.2008 மற்றும் 20.1.2009.

-----

எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில், குழந்தைகள் எந்த நோய்க்காக கொண்டு வரப்பட்டாலும் அதற்கான மருத்துவ கவனிப்புடன் பெற்றோர்களுக்கு குழந்தை வளர்ப்பு, தடுப்பூசிகள், சுகாதாரம் ஆகிய அனைத்து நல்வாழ்வு முறைகளை பற்றி விழிப்புணர்வு செய்திகள் அளிக்கப்படுவதுடன், குழந்தைகள் மருத்துவ தீவிர சிகிச்சை பிரிவில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தீர்க்க முடியாத நிலையில் உள்ள உயிருக்கு போராடும் குழந்தைகள் பலர் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு மூளை காய்ச்சல், டெங்கு நோய், சுவாச நோய், பாம்பு கடி நோய், நாய்கடி நோய், தேள்கடி நோய் மற்றும் பலவிதமான வியாதிகளுக்கு நல்லமுறையில் மருத்துவ சிகிச்சை செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 1000 குழந்தைகள் குணமடைந்து செல்கிறார்கள் என்றும், எனவே இந்த பிரிவின் சேவையை மேலும் மேம்படுத்துவதற்கும் மருத்துவர்கள் தங்கள் பணியை செவ்வனே செய்வதற்கும் சில முக்கியமான உபகரணங்கள் மற்றும் உயிர்காக்கும் சாதனங்கள் தேவைப்படுகின்றன என்றும், எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் உள்ள 20 படுக்கை வசதிகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவிற்கு தேவையான உயிர்காக்கும் கருவிகள் வாங்குவதற்காக ரூ.164.280 இலட்சம் தோராயமாக தேவைப்படுகிறது என இயக்குநர், குழந்தைகள் நல பிரிவு மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை மருத்துவ கல்லூரி, சென்னை அவர்கள் மதிப்பீடு செய்து அதை எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கி மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள அனுமதிக்குமாறு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரிடம் கோரிக்கை செய்தார்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அதை ஏற்று பரிந்துரை செய்துள்ளார்கள் என்றும் எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையானது தமிழ்நாட்டிலுள்ள மிகவும் பின் தங்கிய மக்கள் வசிக்கும் பகுதியில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள உடல் உழைப்பால் பிழைக்கும் மக்கள் மற்றும் நடுத்தர மக்களின் குழந்தைகளுக்கு பெரிதும் பயன்பெறும் மருத்துவமனையாகும் என்றும் ஆகையால் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவிற்கு தேவையான உயிர்காக்கும் கருவிகள் வாங்குவதற்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் மேற்கொண்டால் இப்பகுதி

மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக அமையும் என்றும் வரையறுக்கப்படாத பணிகளுக்கான நிதியிருப்பு ரூ.37.626 இலட்சம் மட்டுமே உள்ளதால் இப்பணியின் முக்கியத்துவம் கருதி, இப்பணிக்கு தேவையான ரூ.164.280 இலட்சத்தை கட்டாயப்பணிகளுக்கான நிதியிருப்பான ரூ.136.473 இலட்சங்களை பயன்படுத்திக் கொள்ளவும், வரையறுக்கப்படாத பணிகளுக்கான நிதியிருப்பில் மீதமுள்ள ரூ.37.626 இலட்சத்தில் ரூ.27.807 இலட்சத்தை எடுத்து செய்யவும் சிறப்பு இனமாக கருதி விதிகளை தளர்த்தி அரசின் சிறப்பு அனுமதி கோரி உள்ளார்.

2. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து ஏற்று கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வரையறுக்கப்பட்ட நிதியிருப்பில் உள்ள ரூ.136.473 இலட்சமும் மற்றும் வரையறுக்கப்படாத பணிகளுக்கான நிதியிருப்பில் உள்ள ரூ.37.626 இலட்சத்திலிருந்து ரூ.27.807 இலட்சமும் எடுத்துக்கொண்டு, ஆக மொத்தம் ரூ.164.280 இலட்சத்தில் (136.473+27.807=164.280) எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையிலுள்ள தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு தேவையான உயிர்காக்கும் கருவிகள் வாங்கும் பணிக்கு பயன்படுத்திட, இதனை ஒரு சிறப்பினமாகக் கருதி அரசாணை (நிலை) எண். 107, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் 23.6.2008ல் வெளியிடப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தளர்த்தி அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இப்பணி குறித்து தேவையான தொடர் நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்தும் ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
அரசு முதன்மைச் செயலாளருக்காக.